# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு 2028 மார்கழி 10 வியாழக்கிழமை (25-12-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 26


# வேட்புமனு நிராகரிப்பை எதிர்த்து கூட்டணி வழக்கு?

## உயர்மட்டத்தில் ஆராயப்படுகிறது

கொழும்பு, டிசம்பர் 25

யாழ். குடாநாட்டில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்காக இரு சபைகளுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி தாக்கல் செய்த வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் நிராகரிக்கப்பட்டதை ஆட்சேபித்து நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யலாமா என்று அக் கட்சியின் தலைமைப் பீடம் கொழும்பில் ஆராய்ந்து வருகின்றது எனத் தெரிய வந்தது.

யாழ்ப்பாணம் மாநகர சபை, வலிகாமம் வடக்கு பிரதேச சபை ஆகியவற்றில் போட்டியிடுவதற்குத் தமிழர் விடுதலைக் கூட்டணி தாக்கல் செய்த நியமனப் பத்திரங்கள் நிராகரிக்கப்பட்டன என்பது தெரிந்ததே.

இரண்டு நியமனப் பத்திரங்களிலும் ஒவ்வொரு வேட்பாளர்கள் பதினெட்டு வயதைப் பூர்த்தியடையாதவர்கள் என்பது கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்தே அவை தள்ளுபடி செய்யப்பட்டதாக தேர்தல் திணைக்களம் அறிவித்தது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இரு புலிகள் பலி!

வரணியில் கடந்த 21 ஆம் திகதி படையினருடன் இடம்பெற்ற மோதல் ஒன்றில் தமது தரப்பில் இருவர் களப் பலியானதாக ''புலிகளின் குரல்'' தெரிவித்தது.

மேஜர் வெற்றிச் செல்வன் (பஞ்சநாயகம் லோறன்ஸ்—எழுதுமட்டுவாழ்), கப்டன் பதுமன் அல்லது விதுனன் (கனகசுந்தரம் பாலகுமார்—கொடிகாமம்) ஆகியோரே களப்பலியானதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-164-3)




## இனப்பிரச்சினை விவகாரத்தில்

## மத்தியஸ்தராகச் செயற்பட பேராயர் டுட்டு விருப்பம்!

கொழும்பு, டிச. 25

இலங்கை இனப்பிரச்சினைக்கு நிரந்தர சமாதானத் தீர்வு ஒன்றைக் காணும் முயற்சியில் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு இடையில் மத்தியஸ்தராகச் செயற்படத் தாம் தயார் எனத் தென்னாபிரிக்க பேராயர் டுட்டு அறிவித்திருக்கின்றார்.

தென்னாபிரிக்காவில் ஒடுக்கப்பட்ட கறுப்பின மக்களுக்காகக் குரல் எழுப்பிய தன் மூலம் சர்வதேச மதிப்பைப் பெற்ற பேராயர் டுட்டுவுக்கு அவரது பணிக்காக சமாதானத்துக்கான நோபல் பரிசும் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச ரீதியில் மதிப்புப் பெற்ற தலைவரான பேராயர் டுட்டு, தென்னாபிரிக்காவின் உண்மை, புரிந்துணர்வு ஆணைக்குழுவின் தலைவராக தற்போது பணிபுரிகின்றார். தென்னாபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலாவுக்கு மிக நெருங்கிய ஆலோசகராகவும் அவர் செயலாற்றுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தைச்

(10ஆம் பக்கம் பார்க்க)

## லித்துவேனியாவிலிருந்து

## 103 ஈழத்தமிழர் இன்று நாடுகடத்தப்படுவர்

கொழும்பு, டிச. 25

முன்னாள் ரஷ்யக் குடியரசான லித்துவேனியாவுக்குள் சட்டவிரோதமாக நுழைந்ததாகக் கருதப்படும் சில பெண்கள் உட்பட 103 ஈழத் தமிழர்களை அந்த நாட்டு அரசு கிறிஸ்மஸ் தினமான இன்று ஸ்ரீலங்காவுக்கு நாடு கடத்தவிருக்கின்றது.

வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் இத்தகவலை வெளியிட்டார்.

லித்துவேனிய அரசாங்கத்தால் ஒழுங்குபடுத்தப்படும் விசேட விமானம் ஒன்றில் இவர்கள் ஏற்றப்பட்டு இலங்கைக்கு அனுப்பப்படவிருக்கின்றார்கள்.

லித்துவேனியாவுக்குள் சட்டவிரோதமாக நுழைந்ததாகக் கூறப்படும் இருநூறு இலங்கையர்களை அந்நாட்டு

(10ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக்குக் கூடுதலாக மருந்து அனுப்ப முடிவு!

கொழும்பு, டிச. 25

இராணுவக் கட்டுப்பாடு அற்ற வன்னிப் பிரதேசத்துக்கு வழக்கத்தை விட 30 சதவிதம் கூடுதல் மருந்துப் பொருள்களை அனுப்ப நேற்றுக் கொழும்பில் நடந்த உயர்மட்ட மாநாட்டில்முடிவு செய்யப்பட்டது.

சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த மாநாட்டில் உள்ளூர், வெளியூர் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளும், தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் நீலன் திருச்செல்வம், அத்தியாவசிய சேவைகள் நாயகம் சோம பாலகுணதீர ஆகியோரும் பங்குபற்றினர்.

வன்னியில் உள்ள மல்லாவி வைத்தியசாலையைப் புனரமைத்து கூடுதல் கட்டில் வசதிகளைச் செய்து கொடுப்பது என்றும் இந்த மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

மல்லாவி ஆஸ்பத்திரிக்கு நூறு கட்டில்களும் —

யாழ். ஆஸ்பத்திரிக்கு ஐந்நூறு கட்டில்களும் —

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மாஞ்சோலையில் தாக்குதல்

கொழும்பு, டிச. 25

மட்டக்களப்பு மாவட்டம் மாஞ்சோலைப் பகுதியில் உள்ள பொலீஸ் காவலரண் ஒன்றின் மீது நேற்று முன்தினம் இரவு விடுதலைப் புலிகள்திடீர் தாக்குதல்ஒன்றை நடத்தினர்.

இத்தாக்குதலில் இரு பொலீஸார் காயமுற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## மட்டு. வீதிகளில் புலிகள் திடீர்த் தடை முகாம்!

### 4,200 பற்றறிகளை எடுத்தனர்

கொழும்பு, டிச. 25

மட்டக்களப்பு சுங்காங்கேணிப்பகுதியில் வீதியால் சென்றுகொண்டிருந்த வாகனங்களை மறித்துச் சோதனையிட்ட விடுதலைப் புலிகள் முஸ்லிம்களுக்குச் சொந்தமான வான் ஒன்றில் இருந்து 4 ஆயிரத்து இருநூறு பற்றறிகளைக் கைப்பற்றியதாகக் கூறப்படுகின்றது.

கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில்— வாழைச்சேனைக்கும் கும்புறுமூலைக்கும் இடையில் உள்ள சுங்காங்கேணிப்பகுதியில் — நேற்றுக் காலை விடுதலைப் புலிகள் திடீரெனத்தோன்றி, தடை முகாம் ஒன்றை அமைத்து, அவ்வழியே போக்குவரத்தில் ஈடுபட்ட வாகனங்களை வழிமறித்து சோதனையிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அவ்வாறு சோதனையிடப்பட்ட சமயமே முஸ்லிம் வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான வாகனத்திலிருந்து டோர்ச் பற்றறிகள் கைப்பற்றப்பட்டன.

மற்றொரு வான் வழிமறிக்கப்பட்ட போதும் அது நிறுத்தப்படவில்லை என்றும்—

இதனால் அந்த வானுக்குள் கிரனேட் வீசப்பட்டதாகவும்—

எனினும் அந்த கிரனேட் வெடிக்கவில்லை என்றும்—

அந்த வானை ஓட்டி வந்தவர்கள் பின்னர் பொலீஸில் இச்சம்பவம் குறித்து முறைப்பாடு செய்தனர் என்றும் —

கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி இரண்டு வாகனங்களும் காத்தான்குடிப் பகுதி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## உசனில் கிளைமோர் தாக்குதல்! மேஜர் உட்பட 4 படையினர் பலி!!

கொழும்பு, டிச. 25

மிருசுவில் உசன் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 4 30 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய கிளைமோர் தாக்குதலில் அவ்வழியே சென்று கொண்டிருந்த இராணுவ வாகனம் ஒன்று சிக்கி அயலில் இருந்த வயலுக்குள் தூக்கி வீசப்பட்டது. வாகனத்துக்குள் இருந்த மேஜர் ஒருவரும் 4 படையினரும் உயிரிழந்தனர்; மற்றும் இரு படையினர் காயமடைந்தனர்.

14 ஆவது படைப்பிரிவின் இரண்டாவது கட்டளையிடும் அதிகாரியான மேஜர் சந்திரானந்த ஜெயதிலகவே கொல்லப்பட்ட இராணுவ அதிகாரியாவார்.

காயமடைந்த படையினர் அம்புலன்ஸ் மூலம் சாவகச்சேரிக்குக் கொண்டு வரப்பட்டு அங்கிருந்து ஹெலிக்கொப்டர் மூலம் பலாலிக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

சாவகச்சேரியிலிருந்து கொடிகாமத்துக்குச் சென்றுகொண்டிருந்த படையினரின் வாகனமே மிருசுவிலில் கிளைமோர் தாக்குதலுக்கு இலக்[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவருக்கும் எமது
நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்களை
மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்

திருமறைக் கலாமன்றம்
Centre for Performing Arts
எடுக்கும்

மன்ற அரங்கில் கிறிஸ்மஸ் விழா இரண்டு நாள்கள்

27-12-1997 சனி
சிறுவர் கலைக்கூட மாணவர்களின்
மழலைக் கீதங்கள்
★
குடிலின் கானங்கள்
(இசை நிகழ்ச்சி)

28 12-1997 ஞாயிறு
கவின் கலைகள் பயிலக மாணவர்களின்
திசை மாறிய பறவைகள்
(கூத்துப் பண்நடம்)
★
இருட்டு உருவங்கள்
(நாடகம்)

நேரம்: பிற்பகல் 5.30 மணி.
பிரவேசம் இலவசம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- திருமறைக் கலாமன்றம்
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(சி/2473)


# மரண அறிவித்தல்கள்

## வைரமுத்து சுப்பையா
[கைதடி]

கைதடி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட வைரமுத்து சுப்பையா 23-12-97 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற திருமதி பொன்னம்மாவின் அன்புக் கணவரும், நவமணி (கனடா), இராசமணி, சுப்பிரமணியம (கடற்றொழில் இலாகா — கச்சேரி, யாழ்ப்பாணம்), மனோன்மணி (இத்தாலி), தவமணி (கனடா), காண்டீபன் (கனடா), ஈஸ்வரன் (சுவிஸ்), உருத்திரன் (நோர்வே), நளினி (யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், கணபதிப்பிள்ளை (பாரிஸ்), தவமலர் (கைதடி), நவரத்தினம் (இத்தாலி), சோதி (கனடா), பத்மவிஜிதா (கண்டி), சறோஜினிதேவி, சரளாதேவி, ஸ்ரீகரன் (புள்ளிவிவர திணைக்களம், கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுரேஷ், வேணுகாந்தன் (பொறியியலாளர் பகுதி, அமெரிக்கா), றமேஷ் (கனடா), பிரதீபா, கௌசிகா, பார்த்தீபன், தர்சனா, தக்சன் ஆகியோரது அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24-12-97 அன்று அன்னாரது இல்லத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
பிள்ளைகள்

தட்டாங்கலட்டி,
கைதடி.
(52062)

## இமானுவேல் பொன்னுத்துரை
(கத்தோலிக்க அச்சக முன்னாள் மெக்கானிக்)

இம்மனுவேல் பொன்னுத்துரை அவர்கள் 13 - 12 - 97 அன்று கனடாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு. திருமதி அந்தோனிப்பிள்ளை அவர்களின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற திரு. திருமதி செல்லத்துரை பாக்கியம் ஆகியோரின் மருமகனும், றீற்றா றுக்மணி (கனடா) அவர்களின் அன்புக் கணவரும், அன்ரன் (கனடா), ஜெபறாஜா (ஜேர்மன்) மேரி ஆன், சுகுணா (கனடா) சுகுமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராசேந்திரம் (இளைப்பாறிய ஆசிரியர்) காலஞ்சென்ற மிக்கேல்பிள்ளை ஆகியோரின் சகோதரருமா கிறிஸ்ரி, மரியநாயகம் ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் பூதவுடல் 20- 12- 97 அன்று கனடாவில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை சகலரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
F. கிறிஸ்ரி லோறன்ஸ்
(மைத்துனர்)

174, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்
(52080)

## அந்தோனிப்பிள்ளை போல்ராசா

அந்தோனிப்பிள்ளை போல்ராசா அவர்கள் கனடாவில் காலமானார்.

இவர் திருமதி றெஜினா போல்ராசாவின் அன்புக் கணவரும், திரு. லூயிபோல்ரன் (கனடா), சங். சகோதரி லூமினா போல்ராசா (தி. கு. க.), திருமதி வஸந்தா றூமன் (இந்தியா), திரு. றெஜி போல்ரன் (கனடா), திருமதி நிமலா பென்சன் (கனடா) ஆகியோரின் பாசமுள்ள தந்தையும், காலஞ்சென்ற திரு அ. கிறிஸ்தோப்பர், திரு அ. செபஸ்தியாம்பிள்ளை (இளைப்பாறிய அதிபர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரது இறுதிச் சடங்குகள் கனடாவில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

தகவல்:
செ. யோசவ் (சகலன்)

(52063)

## ஒளி விழா

சண்டிலிப்பாய் பிரதேச செயலக நலன்புரிச் சங்கம் நடத்தும் கிறிஸ்மஸ் ஒளிவிழா நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. ஒளியேற்றுதல், நத்தார் மரம் திறந்து வைத்தல், பரிசுத்தவேதாகம செய்தி, நத்தார் செய்தி, ஆசி வழங்கல் ஆகியனவும், கலை நிகழ்ச்சிகளும் இவ் விழாவில் இடம் பெறவுள்ளன. (ஐ 135)

★ ★ ★

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். பிரிவின் ஒளிவிழா எதிர் வரும் ஞாயிற்றுக் கிழமை தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் தலைமையில் சங்கப் பணிமனையில் நடைபெறும். (ஐ-111)

★ ★ ★

நெடுந்தீவு மகாவித்தியாலய ஒளிவிழா எதிர்வரும் சனிக்கிழமை வித்தியாலய அதிபர் திருமதி பி.எம்.ஜே. அன்ரனி தலைமையில் நடைபெறும். நெடுந்தீவுக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். தில்லைநாதன், பங்குத் தந்தை அருட்திரு. மொன் வெட் அடிகள், தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்த அருட்திரு. என் டி. ஜெயநேசன் ஆகியோர் கலந்து கொள்வர்.

★ ★ ★

''பாதுகாவலன்'' பத்திரிகையின் ஆதரவில் பத்திரிகையாளர் சங்கம் நடத்தும் ஒளி விழா எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை யாழ். ஆயர் அதிவந். தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளார் தலைமையில் மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெறும். (ஐ-111)


லிபேட்டி
சினிமா
அச்சுவேலி.
30 அடி அகலத் திரையில்
ரஜனி, நக்மா நடித்த
பாட்ஷா
நேரம்: 10-30, 2-30
25-12-97 வியாழன்
(51893)


# கசிப்பு வைத்திருந்தவருக்கு ஆறு மாதக் கடுழியச் சிறை

யாழ்ப்பாணம், டிச. 25

20 லீற்றர் வரையான கசிப்பு வைத்திருந்த ஒருவருக்கு நேற்று யாழ்ப்பாணத்தில் இயங்கும் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் ஆறு மாதகால கடுழியச் சிறைத் தண்டனை விதித்தது.

பருத்தித்துறையைச் சேர்ந்த சிவலிங்கம் சிவநேசன் என்பவருக்கு எதிராகவே இத் தண்டனை விதிக்கப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் குற்றவாளிக்கு 7500 ரூபா அபராதம் விதித்தார்.

குற்றவாளி பணத்தைச் செலுத்தத் தவறியதால் அவருக்கு 6 மாத காலம் கடுழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. (உ-9)

## பாதுகாப்பு

வடமராட்சி, டிச. 25


நெல்லியடி வர்த்தக சங்கத்தினால் இரவு நேரம் வர்த்தக நிலையங்களைப் பாதுகாப்பதற்கென பாதுகாப்புச் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ஐ-173)


வாழ்த்துக்கள்
அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்
அனைவருக்கும் எமது
இதயங்கனிந்த
நத்தார்-புதுவருட
நல்வாழ்த்துக்கள்!
வினோத் ரெக்ஸ்ரைல்ஸ்
19, நவீன சந்தை, சாவகச்சேரி.
(சி/2474)

இதயம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கூறி
இருகரம் நீட்டி அழைக்கிறது யாழ்நகரில்!
பூபாலசிங்கம் புத்தகசாலை
வியாபாரிகளுக்கு விசேட கழிவுடன்
விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன!
★ சகல விதமான கலண்டர்கள்
★ சகல விதமான டயரிகள்
★ புத்தாண்டு வாழ்த்து மடல்கள்
★ தென்னிந்திய தமிழ் சஞ்சிகைகள், நாவல்கள்
★ கொழும்பு - யாழ். அனைத்து பத்திரிகைகள்
அனைத்திற்கும் யாழ்நகரில் ஒரே இடம்
பூபாலசிங்கம் புத்தகசாலை
இல. 4A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/2476)


# இதய அஞ்சலி

248 ஆம் நாள் நினைவஞ்சலி 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி பிலோமினா அந்தோனிப்பிள்ளை**
மலர்வு: 16 - 04 - 1935
உதிர்வு: 22 - 04 - 1997

**அமரர் டானியல் அந்தோனிப்பிள்ளை**
(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்)
மலர்வு: 11 - 06 - 1926
உதிர்வு: 25 - 12 - 1995

அன்புக்கினிய பெற்றோரே!

எங்கள் நல்வாழ்வுக்காக எத்தனையோ தியாகங்கள் புரிந்து எம்மை வளமாக வாழவைத்தீர்களே! வருடா வருடம் வரும் கிறிஸ்மஸ் நன்னாளை வெகு சிறப்பாக எம்முடன் இணைந்து மகிழ்வித்தீர்களே! இன்று இன்னாளில் மகிழ்ந்திட இங்கு நீங்கள் இல்லை தந்தையே; கிறிஸ்மஸ் நன்னாளில் விண்ணகம் அடைவீர்கள் என்பதை அறிந்தோ புவியில் வாழும் வரை எம்மை இன்னாளில் மகிழ்வித்தீர்கள். தங்கள் பிரிவுத் துயரால் வருந்தும் நாம் தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''றோஸ் மஹால்''
24, முதலாம் குறுக்குத் தெரு,
பாஷையூர், யாழ்ப்பாணம்.
(52096)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆத்மசாந்தி அஞ்சலி

சுன்னாகம் மயிலணி
**சிவஸ்ரீ சோ. சோமஸ்கந்த குருக்கள்**
13-12-97 அன்று சிவபதமடைந்த நினைவாக ஆத்மசாந்தி அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

அதிபர், ஆசிரியர்கள்.
சுன்னாகம் மயிலணி
சைவமகா வித்தியாலயம்.

[52075]

## தவறவிட்ட தங்கநகை

நவாலி, டிச. 25

நல்லூர் முருகன் ஆலய வீதியில் கண்டெடுக்கப்பட்ட சிறிய தங்க மோதிரம் ஒன்று யாழ். செயலக ஊழியரால் கண்டெடுக்கப்பட்டு செயலக தாபனக் கிளையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளலாமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-100)

## பனை அபிவிருத்திச் சபை
### கைப்பணிப் போட்டி

நாடளாவிய ரீதியில் பனை அபிவிருத்திச் சபையால் நடத்தப்படும் பனங் கைப்பணிப் போட்டியில் பங்கேற்று, வெற்றிக் கிண்ணத்தைத் தட்டிக் கொள்ளுங்கள்.

பரிசில்களும், சான்றிதழ்களும் தேசிய ரீதியாகவும், மாவட்ட ரீதியாகவும் வழங்கப்படும். போட்டிக்கான முடிவு திகதி 10 . 01 . 1998.
மேலதிக விவரங்களுக்கு:-

பொது முகாமையாளர்,
பனை அபிவிருத்திச் சபை,
53, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

[சி/2466]

## மீள்கேள்வி அறிவித்தல்
### நல்லூர் பிரதேச சபை திருநெல்வேலி

19—11—1997 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி நிபந்தனைகளுக்கமைய என்னால் கீழ்க்குறிப்பிட்ட சந்தை, இறைச்சிக்கடைகள் என்பவற்றை 1998 ஆம் ஆண்டு தை மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் 1998 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31 ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன. கேள்விப்பத்திர விநியோகம்— 26-12-1997 வெள்ளி பி.ப. 3 00 மணி கேள்விப்பத்திரம் ஏற்கும் திகதியும் நேரமும் 29-12-1997 திங்கள் காலை 10-00 மணி. கேள்வி திறக்கும் திகதியும், நேரமும்— 29-12-1997 திங்கள் பி. ப. 3-00 மணி.

சி. வேன்முருகோன்பிள்ளை
விசேட ஆணையாளர்,
நல்லூர் பிரதேசசபை.

நல்லூர் பிரதேசசபை,
திருநெல்வேலி. 22-12-97.

| சந்தை, இறைச்சிக்கடைகள் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரம் | மீளளிக்கப் படும்கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடியஆகக் குறைந்த தொகை |
|---|---|---|---|
| **1. சந்தைகள்** | | | |
| 1. கோண்டாவில் ஸ்ரேசன் சந்தை | 250/- | 1,500/- | 7,000/- |
| **2. ஆட்டிறைச்சிக் கடை** | | | |
| 1. கொக்குவில் உப — அலுவலக ஆட்டிறைச்சிக்கடை | 250/- | 3,000/- | 40.000/- |
| **3. மாட்டிறைச்சிக்கடை** | | | |
| 1. சாளியப்பிட்டி அரியாலை மாட்டிறைச்சிக்கடை | 250/- | 3,000/ | 40,000/- |
| 2. கோவில் தோட்டம் மாட்டிறைச்சிக்கடை | 250/- | 3,000/- | 12,000/- |

(சி/2468)

## தேடப்படுகிறது

முக்கிய ஆவணங்களுடன் எனது 1997 ஆம் ஆண்டுக்குரிய 25 X 20 Cm கறுப்பு நிற Management diary 14-12-97 இல் இருந்து காணவில்லை. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியில் ஒப்படைக்குமாறு அன்புடன் வேண்டப்படுகிறீர்கள். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**Dr. A. நவரட்ணராஜா,**
விலங்கு விஞ்ஞான துறை,
விவசாய பீடம்,
யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி.

(52059)

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை
### சுன்னாகம்
### (சுன்னாகம், உடுவில்,ஏழாலை) உபஅலுவலகங்கள்
## ஆதனவரி அறிவித்தல்-1998

1987 ஆம் ஆண்டின் பிரதேசசபைகள் கட்டளைச் சட்டம் இல. 15 இன் கீழ் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் சார்பாக ஆதனவரி அறவீடு சென்ற வருடம் அறவிடப்பட்ட வரி விகிதத்தின் பிரகாரம் 1998 ஆம் ஆண்டும் அறவீடு செய்யப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1998 ஆம் ஆண்டுக்கான ஆதனவரியை 31—01—98 ஆந் திகதிக்கு முன்பாக முழுமையாகச் செலுத்துவோருக்கு அவ்வருட மொத்த வரியில் 10 வீதம் கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டுக்குமுரிய வரியை அந்தக் காலாண்டின் முதல் மாத முடிவுக்குள் செலுத்துவோருக்கு காலாண்டுக்கான வரியின் 5 வீதம் கழிவு வழங்கப்படும்.

குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரிகளைச் செலுத்தத் தவறினால் வசிப்பிடங்களுக்கும் வெற்றுக் காணிகளுக்கும் முறையே 15 வீதமும், ஏனைய ஆதனங்களுக்கு 20 வீதமும் விறாந்துக் கட்டணமாக வரியுடன் சேர்த்துச் செலுத்தப்பட வேண்டும்.

எனவே தங்கள் ஆதனங்களுக்குரிய வரிகளை 31—01—98 நண்பகல் 12 மணிக்கு முன்பாக அந்தந்த அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி வரிக் கழிவுகளைப் பெற்று, சபையுடன் ஒத்துழைக்குமாறு வரியிறுப்பாளர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

குறிப்பு:
1. 1997 ஆம் ஆண்டு முடியவுள்ள வரிநிலுவைகள் செலுத்தப்பட்ட பின்பே 1998 ஆம் ஆண்டுக்கான வரி ஏற்றுக் கொள்ளப்படும்.
2. சேதமடைந்தும் காலியாகவுள்ளதுமான ஆதனங்களுக்கான வரி விலக்கின் பொருட்டான விண்ணப்பங்கள் 31—01—98 ற்கு முன் கிடைக்கக்கூடியதாக இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
3. தற்போதைய காலச் சூழ்நிலை காரணமாக வருடாந்த அறிவித்தல் பத்திரங்கள் தாமதமானாலும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொண்டு தங்கள் வரிகளை உரிய காலத்தில் அலுவலகத்தில் செலுத்தி நிர்வாகத்துடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஆ. மகாலிங்கம்
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்,
1997—12—20

(சி/ 2467)

ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்
மற்றும் அனைவருக்கும்
**எமது நத்தார், புத்தாண்டு வாழ்த்துக்கள்**

**NEW SCIENCE HALL**
கன்னாதிட்டி வீதி — யாழ்ப்பாணம்.

**ஜனவரி 1 முதல்**
**A/L 2000**
கணித, உயிரியல் பிரிவுகளுக்கான
வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன-

எமது கல்வி நிறுவன
வழமையான ஆசிரியர் குழு

★ ஆரம்பம்: 01 – 01 – 1998 வியாழன் காலை 8 மணி
★ அனுமதிகளை 25 - 12 - 97 முதல் 31-12-97 வரை பெற்றுக் கொள்ளவும்.

(52050)

**உள்ளூராட்சித் தேர்தலில்**
**உங்கள் சின்னம் நங்கூரம்**



X

விளம்பர இலக்கம் (67651)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் நத்தார் சிறப்பிதழ்


வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
எமது உளமார்ந்த

**நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்**

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதத்துடன்
22 கரட் தங்க நகைகளைப் பெற்றிட
யாழ். நகரில் பெயர் பெற்ற நகை மாடம்

**சாரங்கா நகைமாடம்**

177/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


## அன்பு உறைந்திடும் இடத்தில்
# இயேசு பிரான் குடிகொள்வார்

கிறிஸ்து பிறப்பு விழாவை மீண்டும் ஒருமுறை சந்திக்கும் இவ்வேளையில் அவ் விழா எமக்குத் தரும் செய்தியின் பொருளை அறிவது அவசியம்.

கிறிஸ்து பிறப்பு அன்று கொடுத்த அதே மகிழ்ச்சியை அதே விசையோடு இன்றும் கொடுக்கின்றது. கிறிஸ்து பிறப்பு என்றதும் கிறிஸ்து பிறப்பு ''நிகழ்ச்சியை'' விட கிறிஸ்து பிறப்புக் ''கொண்டாட்டம்'' தான் நம் கண்களுக்கும் சிந்தைக்கும் வந்து விடுகின்றது.

கிறிஸ்து பிறப்புத் தரும் மகிழ்ச்சி புத்தாடையின் சரசரப்போடும், உணவின் அறுசுவையோடும், கேளிக்கைகளோடும் நின்று விடுகின்றது. கிறிஸ்மஸ் திருப்பலியில் பக்தியோடு பங்கேற்க வேண்டும் என்ற ஒழுங்கோடு முடிந்து விடுகின்றது.

ஆனால் இந்த கிறிஸ்து பிறப்பு விழா எமக்குத்தரும் ஆழமான செய்தியை நாம் உய்த்துணர்வதில்லை. இந்த நத்தார் இரவு எமக்கு ஒரு செய்தி தரும் இரவு என்பதை மறந்துவிடுகின்றோம். இந்த நத்தார் இரவு எமக்கு ஒரு சமாதானத்தின் இரவு என்பதை அறிந்து கொள்வதில்லை.

சமாதானம் என்றால் வெறும் அமைதி நிலையெனப் புரிந்து கொள்கின்றோம். ஆன்மாவைச் சார்ந்தது அது என நினைக்கின்றோம். எந்தத் துன்ப நிலையிலும் இடர்ப்பாட்டிலும், இடம் பெயர்வுகளிலும் யார் அநீதிழைத்தாலும் சரி, சமாதானம் வேண்டும் என்று பகர்கின்றோம். இது பக்தர்களின் சமாதானமல்ல; படுகோழைகளின் சமாதானம், இது இறைவனிடம் இருந்து வரும் சமாதானமல்ல; யாரும் தாக்காத படி நாமே எழுப்பிக் கொண்ட தகர்ந்துவிடக் கூடிய தடுப்புக் கோட்டை.

விவிலியக் கண்ணோட்டத்தில் மனிதனின் முழு நலனையும் சார்ந்தது சமாதானம். அது இவ்வுலக நலன்களாலும் இறைவனோடும். பிறரோடும் கொள்ளும் நல்லுறவாலும் பிறக்கின்றது. உலகோடும் உடன் மனிதரோடும் உறவு முறிந்த நிலையில் சமாதானம் இருக்க முடியாது.

நத்தார் இரவு தரும் சமாதானம் ஏழைகளுக்கு நீதி வழங்கி வறியவர்களுக்கு உறுதுணையாக இருக்கும் நன்மனத்தவர்களுக்கு உரியது. நீதியை நிலை நாட்டாமல் மேலோட்டமாக சமாதானம் நிலைநாட்ட முற்பட்டால் அது ஆபத்தானது. சமாதானம் என்பதே இல்லாத போது 'சமாதானம் சமாதானம்' என்று நம் மக்களின் காயத்தை மேலோட்டமாக நலமாக்கிவிட்டனர் (எரே. 6: 13-15) என இன்றையஎம் மக்களின் நிலையை அன்றே முன்னுரைத்து வைத்தார் இறைவாக்கினர் எரேமியாஸ்.

நத்தார் இரவு நமக்குச் சமாதானத்தின் இரவா? இல்லை... இல்லை... ஏழ்மையில் ஒடுங்கிக் கிடக்கின்ற மனித குலத்தின் அழுகைக் குரல் அந்த இரவின் நிசப்தத்தில் தெளிவாகத்தொனிக்கின்றது.

பகல் நேரத்தில் நீதியின் குரலுக்குத் தன் காதுகளை

(9 ஆம் பக்கம் பார்க்க)

அருட்சகோதரன்
**எஸ். ஏ. ரொஷான்**


வாடிக்கையாளர்கள், நண்பர்கள், மாணவர்கள், அன்பர்கள் அனைவருக்கும்
**இதயங் கனிந்த சிற்றியின் நத்தார் வாழ்த்துக்கள்!**
அனைத்துரக புடைவைத் துணிகளையும் நவீன டிசைன்களில் உடனுக்கு உடன் அறிமுகப்படுத்துபவர்களும்
றெடிமேட் தெரிவுகளுக்கும் யாழ். நகரில் பிரசித்தியான ஸ்தாபனம்

**சிற்றி ரெக்ஸ்** [ஆடவர் துணிகளின் சங்கமம்]

யாழ். நகரில் நாளைய நாகரிகத்தினை இன்றே அறிமுகம் செய்து நவீன டிசைன்களில்
உங்கள் எண்ணம் போல் எடுப்புற தைப்பதில் முன்னணியாளர்கள்.

**CITY TAILORES**
**(SPECIALIST IN WEDDING COATS & SUITS)**

எம்மிடமே ஆடவர் துணிகளை கொள்வனவு செய்து தைப்பவர்களுக்கு விசேட சலுகை அளிக்கின்றோம்.
அனைத்துத் தேவைகளையும் ஒரே இடத்தில் குறைந்த விலையில் நிறைந்த பயனுடன் பெற்றுக்கொள்ள என்றும்.

**சிற்றி ரெக்ஸ் & ரெயிலர்ஸ்**

73, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
வாடிக்கையாளரை நிறைவுபடுத்துவதே சிற்றியின் திருப்தி!



**மகாநதியின்**
இனிய வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது இதயங் கனிந்த
**நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்**

கண்கவர் வர்ணங்களில் பகட்டாக மிளிர வைக்கும்
புடைவைத் தெரிவிற்கு நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

**மகாநதி புடைவையகம்**

(முகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்)

16, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

4, நவீன சந்தை,
சாவகச்சேரி.



**அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்!**
யாழ். நகரில் ஒரு குளிர் ஊற்று; குளிர்பான வகைகளின் சங்கமம்

**லிங்கன் கிறீம் ஹவுஸ்**

சுகாதாரமான முறைப்படி தயாரிக்கப்பட்ட ஸ்பெஷல் சொக்லெட், நட்ஸ், புருட்சலட், ஜெலி, வெனிலா ஐஸ்கிறீம் வகைகள், மட்டன்றோல், ... பீடா இன்னும் என்ன வேண்டும்...?
பட்டர் கேக் வகைகள், மிக்ஸர், ...

119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் நத்தார் சிறப்பிதழ்

## அன்பு தான் வெல்லும்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே இயேசுபிரான் பலஸ்தீன தேசத்தில் அவதரித்தபொழுது கிழக்கிலிருந்து மூன்று ஞானிகள் அவரைச் சந்திக்கச் சென்றனர். ''யூதருக்கு இராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு அவரைப் பணிந்துகொள்ள வந்தோம்'' என்றார்கள்.

அவரை அரண்மனைகளிலே தேடினார்கள். இறுதியில் எங்கேயோ ஒரு மாட்டுத் தொழுவத்தில் ஓர் ஏழைத் தாயின் அரவணைப்பில் தூங்கிக் கொண்டிருந்த, குழந்தை இயேசுவை வழிபட்டுச் சென்றனர்.

இயேசு பாலன் பிறந்த பொழுது உரோமப் பேரரசு உலகின் மிகப் பெரிய வல்லரசு. பொம்பே ஜூலியஸ் சீசர், அகஸ்துஸ் சீசர் முதலிய உரோமச் சக்கரவர்த்திகளைக் கண்டு உலகமே நடுநடுங்கி நின்றது. அன்று இயேசு பாலகன் எங்கே? உரோமப் பேரரசர் எங்கே?

ஆனால் உரோமப் பேரரசுகள்மறைந்து போய்விட்டது! அதன்பின் உலகில் எழுந்த எத்தனையோ பேரரசு தோன்றித் தமது காலத்தில் தாண்டவமாடிவிட்டு மறைந்து போயின. அவைகளின் ஆட்சித் திறனையும் போர்த் திறனையும் படை மாட்சியையும் நாம் வரலாற்று நூல்களிலே தான் பார்க்கின்றோம்.

ஆனால் அன்று ஓர் ஏழைக் குடும்பத்தில் தோன்றிய இயேசுகிறிஸ்து இன்றும் கோடானுகோடி உள்ளங்களில் வாழ்கின்றார். திக்கற்றவர்களுக்கும், கைவிடப்பட்டவர்களுக்கும், உரிமையிழந்தவர்களுக்கும் ஆறுதல் அளித்துக் கொண்டிருக்கின்றார்.

ஆகையால் இன்றைய அவலங்களைக் கண்டு நாம் சோர்ந்து போகத் தேவையில்லை. ''இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாள்களிலும் நான் உங்களோடு கூட இருக்கின்றேன்'' என்று கூறிய ஆண்டவர் நம்மைத் திக்கற்றவர்களாய் விடமாட்டார். அன்புதான் மக்கள் விரும்புவது. அன்பு தான் நிலைத்து நிற்பது. அன்புதான் இறுதியில் வெற்றி அடைவது!

உதயன் வாசகர்கள் அனைவருக்கும் எனது நத்தார், புதுவருட வாழ்த்துதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதிவந். எஸ். ஜெபநேசன்.
ஆயர்

தென்னிந்திய திருச்சபை,
ஆதீன அலுவலகம்,
வட்டுக்கோட்டை.

## மானிட ஐக்கியம் நிலவுக!

உலகில் மனித குலம் அழிந்துபோவதை விரும்பாத கடவுள் முழுமனுக் குலத்தையும் மீட்கும் பொருட்டு தமது குமாரனாகிய கிறிஸ்து பாலகனை உலகிற்கு அளித்தார்.

இப்பாலகனின் பிறப்பினை முழு உலகமும் வருடா வருடம் கொண்டாடினாலும் யேசு பாலகன் முழு உலகினையும் அழிவினின்று மீட்கவே வந்தார் என்பதை மறந்து விடுகிறது.

இவ்வாண்டின் இக்கிறிஸ்து பிறப்பின் நாளில் எமது தேசத்திற்கு மீட்பும், மானிட ஐக்கியமும், நல்லுறவும் காணப்பட வேண்டுவோமாக.

பாலன் கிறிஸ்து இயேசுவின் ஆசி உங்கள் அனைவரோடும் இருப்பதாக.

வண. எஸ். பீ.நேசகுமார்,
பிரதேச குருமுதல்வர்.

இலங்கைத் திருச்சபை,
சுண்டுக்குளி.

## அமைதியும் பாதுகாப்பும் நிறையட்டும்

நத்தார் விழா மகிழ்ச்சியின் விழா, ஒளியின் விழா, அமைதியின் விழா, சமாதானத்தின் விழா. 1997 ஆவது ஆண்டுக்குரிய கிறிஸ்து பிறப்பு விழாவை தமிழ் மக்களாகிய நாம் கொண்டாடும் போது மகிழ்ச்சியையும் ஒளியையும், அமைதியையும், சமாதானத்தையும் வேண்டி நிற்கின்றோம்.

இறைவன் மனிதனாய்ப் பிறந்து மனித மாண்பையும் உயிரின் மேன்மையையும் மதிக்கப் பணிக்கிறார். எனவே மனித உயிருக்கு ஊறு விளைவிக்கும் அனைத்தையும் தவிர்ப்பது எமது கடமையாகும்.

இறைமகனாக இருந்தும் தம்மை வெறுமையாக்கி அடிமையின் கோலம் பூண்டு குழந்தையாய் எம்மைச் சந்திக்க வந்த இறைவனின் பிறப்பு விழாவில் வறுமையினால் வாடுவோர், தொழில் வாய்ப்பற்று அல்லலுறுவோர், மருத்துவ வசதியின்றித் துன்புறுவோர், ஒடுக்கப்பட்டோர் அனைவரையும் இறைவன் தம் ஆறுதலால் நிரப்ப வேண்டுகின்றோம்.

மலரும் புத்தாண்டில் போரும் போரின் அனர்த்தங்களும் விலகி அமைதியும், பாதுகாப்பும் நிறைய வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

அதிவந். தோமஸ் சௌந்தரநாயகம்
யாழ். ஆயர்

ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

## கிறிஸ்தவர்கள் சிறப்புப் பெற...

உதயன் வாசகர்களே!

உங்கள் யாவருக்கும் எங்கள் அன்புகனிந்த வாழ்த்துக்கள்.

இறைவன் இந்தப் புவியில் மனுவானார். ஆம், இந்தப் புவியில் தாழ்ச்சியான இடத்தில் ஒரு மாடடையில், கந்தைக் குடிலில் மனுமகன் இயேசு தாழ்மையின் ரூபமாக, அன்பின் சொரூபியாக, பாவமற்ற இராஜாவாக, சமாதானப் பிரபுவாக வந்துதித்தார்.

இவர் பிறப்பினால் கிறிஸ்தவன் உருவாகுகிறான். அவன் எப்பேர்ப் பட்டவன்...?

இல்லத்தில் — தயையுள்ளவனாக,
சமுதாயத்தில் — மரியாதையுடையவனாக,
வணிகத்தில் — நேர்மையுள்ளவனாக,
தொழிலில் — பாரபட்சமற்றவனாக,
எளியோர் பால் — உதவுகின்றவனாக,
துரதிர்ஷ்டமுள்ளவன் பால் — அனுதாபமுடையவனாக,
துஷ்டன் பால் — எதிர்ப்புடையவனாக,
பலம் பொருந்தியவன் பால் — நம்பிக்கையுடையவனாக,
செய்த பிழைக்கு — மனம் வருந்துகிறவனாக,
பிழை செய்தவன் பால் — மன்னிப்புடையவனாக,
வெற்றி பெறுகிறவன் பால் — வாழ்த்துக் கூறுபவனாக,
இறைவனின் பால் — பயபக்தி உள்ளவனாக மனுமகன் இருப்பான்.

திருப்பாலகன் தன்னையே கொடையாக ஈந்தார். அவரில் காணப்பட்ட தாழ்மையையும் அன்பையும் ஏற்றுக் கொள்ளும் போது மேற்கூறிய கிறிஸ்தவனின் சிறப்புகள் தானாகவே எமக்குள் அமையும்.

இறை ஆசி பொருந்திய நத்தார் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

அருட்திரு. சி. சா, கருணைராஜ்
முகாமைக் குரு

மெதடிஸ்த திருச்சபை
யாழ். சேகரம்.


அனைவருக்கும் கல்யாணியின் தித்திக்கும்
நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்
தித்திக்கும் ஐஸ்கிறீம், குளிர்பான வகைகள், அறுசுவையான
சிற்றுண்டி வகைகளுக்கும் அன்றும் இன்றும் என்றும்
யாழ். நகரில் பெயர்பெற்றவர்கள்

கல்யாணி
கிறீம் ஹவுஸ்

73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


## உத்தமர் தத்துவங்கள்...

ஞானத்தின் ஒளியை ஏற்றி
ஞாலத்தை மீட்க யேசு
வானத்தில் இருந்து மண்ணில்
வந்தனன் மேய்ப்பராக!
எத்தனை கோடி ஆண்டு
எளிதினில் கரைந் திட்டாலும்
உத்தமர் தத்துவங்கள்
உலகத்து இருளை நீக்கும்.

— நெடுந்தீவு லக்ஸ்மன்

## புனித வழியைத் தொடர்ந்திடு

அவனியை மீட்டிட அருளொளி உதித்தது
ஆநிரை குடிலிடை குழந்தையாய்ப் பிறந்தது
இதயத்து இருளினை களைந்திட மொழிந்தது
ஈகமும் அன்பும் இறைவழி என்றது
உழன்றிடும் உன்னயலான் துயர் தீர்த்திட - உன்
ஊன் பொருளீந்து அவர் நிலை உயர்த்திட
என்றுமே மனித மாண்பினைப் போற்றிட—பாலன்
யேசுவின் புனித வழியினைத் தொடர்ந்திடு!

— கொழும்புத்துறையூர் எஸ். யேசுதாஸ்

## யேசு எனும் நாமம்

''யேசு என்ற நல் நாமம்
பாரெல்லாம் பரவிய திவ்விய நாமம்
தொழுவத்தில் பிறந்தனன் பாலன்
சிலுவையில் மரித்தனன் தேவன்
பாரெல்லாம் பரவிய திவ்ய நாமம்
கர்த்தர் யேசு என்பது அவன் நாமம்
பாவிகள் திருந்திட வழிகளும் சொன்னான்
ஏழைகள் உயர்ந்திட பாதைகள் காட்டினன்
ஆண்டவன் தூதன் கருணைகொள் பாலன்
பிறந்த நன்னாளே நத்தார்த் தினமாகும்
போற்றுவோம் அவனைத் துதிப்போமே என்றும்
பாடுவோம் யேசு என்ற நல் நாமம்
பாரெல்லாம் பரவிய திவ்ய நாமம்''

— இ. விஜயரத்தினம்


அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
ஆதரவாளர்கள், நலன் விரும்பிகள் யாவருக்கும்
எமது இதயம் கனிந்த

நத்தார், புதுவருட
வாழ்த்துக்களைத்

தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

பி. ஜே. பர்னான்டோ

மூக்குக்கண்ணாடியகமும் பல்கட்டும் நிலையமும்

முக அமைப்பிற்கு ஏற்றவாறும், வைத்திய ஆலோசனைக்கு அமைவாகவும்
மூக்குக் கண்ணாடிகளைத் தெரிவுசெய்வதற்கும்
சிறந்த முறையில் பற்களைக் கட்டுவதற்கும்
நீண்ட கால அனுபவமுடையவர்கள்.

542, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

NATIONAL கறுப்பு வெள்ளை 20'' ரி.வி ஜப்பான் YAMAHA ET. 950, (பெற்றோல்) ஜெனரேற்றரும் விற்பனைக்கு உண்டு 43, செட்டித் தெரு, நல்லூர்.
[52081]

### இறைச்சிக்கோழி

புறோய்லர் இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். இல. 40. கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
[52056]

புறொய்லர் இறைச்சிக் கோழி நியாய விலையில் விற்பனைக்கு உண்டு 54/2, சந்தனமாதா கோயில் முன் ஒழுங்கை, கொழும்புத்துறை வீதி பாண்டியந்தாழ்வு, யாழ்ப்பாணம். சுத்தம் செய்து கொடுக்கப்படும்.
[52069]

இறைச்சிக்கோழி (Broiler) விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். (5) 17, கோயில் வீதி, யாழ்ப்பாணம், (ஆஸ்பத்திரி வீதிச சந்திக்கும் பிரதான வீதிக்கும் இடையில்).
[52082]

### வகுப்பு

புல்லாங்குழல ஓர்கன, இற்றார் ஆகிய வகுப்புகள் மாலை 2 00 மணியிலிருந்து நடைபெறுகின்றன. தொடர்பு: சுரவீணா இல. 23, குறோசற் வீதி, சுண்டுக்குளி (கல்வியலயம் ஒன்றின் அலுவலகத்துக்கு அருகில்).
[51731]

### வீனஸ் அரைனா

ரி. வி. நிழ்ச்சிகளை தெளிவாகப் பார்ப்பதற்கு புதிய அஸ்ரனாவான லும் பழைய அஸ்ரனாவானாலும் சீர் திருத்திப்பொருத்துவதற்கும், ரி. வி டெக். றேடியோ. பணிக்கூடுகளை பழுதுபார்ப்பதற்கும் வீனஸ் குணபாலசிங்கம். (Dip. In. Electronic Eng. London B.Sc Ceylon) 284, ஸ்ரான்லி வீதி, (நாகவிகாரை முன்பாக) யாழ்ப்பாணம் [52044]

### மிருதங்கம்

சகல விதமான தோல் வாத்தியங்களும் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். அத்துடன் பழைய மிருதங்க கொட்டுக்கள் விற்பனைக்கு இருப்பின் அவை நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார், 192/1, நாவலர் வீதி' பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம்.
[51989]

### ஆங்கில வினாத்தாள்கள்

ஆங்கில வினாத்தாள்கள் பெற்றுக் கொள்ளலாம். BOND, INSTITUTES, 58 A, Stanley Road, Jaffna.
[52021]

### ஆங்கில வகுப்புகள்

ஆண்டு 6 முதல் G C.E. (O/L) வரை ஆங்கில வகுப்புகள் லண்டன் பட்டதாரி ஆசிரியரால் நடத்தப்படுகின்றன. தொடர்பு; இல. 12, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
[52065]

### சோதிடம்

உள்நாட்டு. வெளிநாட்டு சாதகக் குறிப்பு எழுத, விவாகப் பொருத்தம் பார்க்க சிவம் சோதிடர், இல. 158, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [52027)

### மகாதேவா ஜோதிடம்

''வியாழமாற்றம்'' புத்தகம் எங்கும் கிடைக்கும். சோதிடரை-கடை-626, பருத்தித்துறை வீதி (நல்லூர் கந்தசாமி கோயில் முன்பாக) காலை 10 மணி தொடங்கி பிற்பகல் 2 மணிவரையும், ஏனைய நோங்களில்வீடு 140. செல்லர் வீதி (கல்வியங்காடு) இடத்திலும் தினசரி சந்திக்கலாம். [சி/2426]

### சேவை

யூனிற டயபுரம், ஸ்பீக்கர், ரான்ஸ்போமர் பற்றிச்சாச்சர் றீவைண்டிங் செய்து கொடுக்கப்படும். பற்றி சாச்சும் செய்து கொடுக்கப்படும். இல. 958/47, K. K S. றோட், யாழ்ப்பாணம்.
(52085)

### தவறிவிட்டது

சீனி வெள்ளிமலை என்பவருடைய விசேட அடையாள அட்டை 12-12-97 இல் சுதுமலை அம்மன் கோயிலடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சீனி வெள்ளிமலை, சுதுமலை தெற்கு. சாவற்கட்டு என்னும் முகவரியில் ஒப்படைக்கவும்.
[49883]

செல்வி கவிதா நடராஜா ஆகிய எனது விசேட அடையாள அட்டை (இலக்கம் 091035985) தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர் கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும். அம்பாள் பார்மசி, பஸ்நிலையம், சாவகச்சேரி. [52078]

நமசிவாயம் சிவசுப்பிரமணியம் என்பவரது 312160889× இலக்க தேசிய அடையாள அட்டை பெரியகடைப் பகுதியில் 21-12-97 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மலாயன்டிரேடிங் கொம்பனி, 210, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும்.
(52079)

### தேவை

றம்ஸ் செட் வாத்திய கருவிகளுக்குரிய பழைய உதிரிப் பாகங்கள் தேவை. தொடர்பு: இல 958/47, K K S றோட், யாழ்ப்பாணம்.
[52084]


## பிரெஞ் மொழி

எழுத, பேச, வாசிக்க
அடங்கலாக 4 மாத பயிற்சி
by:
ஸ்ரீ இந்திரகுமார்
(CAP)
ஆரம்பம்: 02-01-1998
காலை 9 மணி
★ தபால் மூலமும் ஏற்கக் கூடியது.
APSS, 116A 2/1
(2 ஆம் மாடி)
காலிவீதி, வெள்ளவத்தை.
T.P. 596547
(51534)



நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்

## றெனி மூக்குக் கண்ணாடியகம்
(RENNY OPTICIANS)

RENNY
OPTICIANS

உங்கள் கண்களை சரியாகப் பரிசோதித்து கண்ணாடிகளை உடன் பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்:

## றெனி மூக்குக் கண்ணாடியகம்
(RENNY OPTICIANS)

இல. 288, நாவலர் வீதி,
(யாழ். தனியார் வைத்தியசாலைக்கு முன்பாக)
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

இல. 19/3, கொழும்புத்துறை
கண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

கண்டி வீதி,
(பிரதேச செயலகம் முன்பாக)
சாவகச்சேரி.

வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயங் கனிந்த நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்
(52015)


## யா/செங்குந்த இந்துக்கல்லூரி
## பழைய மாணவர் சங்கம்
## பொதுக்கூட்டம்

காலம்:- 04-01-1998 ஞாயிறு
பிற்பகல் 4-00 மணி
இடம்:- தலைமை அலுவலகம் (கல்லூரி)

நிகழ்ச்சி நிரல்

★ இறைவணக்கம் ★ தலைவர் அறிக்கை
★ செயலாளர் அறிக்கை ★ பொருளாளர் அறிக்கை
★ புதிய நிர்வாக தெரிவு ★ செயற் திட்டம் வகுத்தல்

குறிப்பு:- பிரேரணைகள் புதிய அங்கத்தவர் இணைதல் 28-12-97 வரை ஏற்றுக்கொள்ளப்படும். உறுப்பினர்கள் அனைவரும் தவறாது சமுகம் தரவும்.

நன்றி.

பொ. இராசதுரை
தலைவர்

எஸ். பத்மராஜா
செயலாளர்

(52071)

## கிறிஸ்த சேவ ஆச்சிரமம்
மருதனார்மடம் — சுன்னாகம்

கிறிஸ்து ஜயந்தி பஜனையும் கூட்டுப் பிரார்த்தனையும் மார்கழி மாதம் (1997) 26 ஆம் திகதி பிற்பகல் 3-00 மணிக்கு ஆச்சிரம ஆலயத்தில் நடைபெறும்.

அன்பர்கள் யாவரும் இந்த பஜனையில் பங்கு பெறும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

அருள்திரு. சேவக் சாமுவேல்
தேவரத்தினம் அப்பிரட்
(சாம் அண்ணன்)

கிறிஸ்த சேவ ஆச்சிரமம்,
மருதனார்மடம,
சுன்னாகம்.
(52018)

## நினைவு கூருகின்றோம்





சிவஸ்ரீ
**சோ. சோமாஸ்கந்த குருக்கள்**
தோற்றம்: 26-03-1930 மறைவு: 13-12-1997

பிரம்மஸ்ரீ
**சி. சர்வேஸ்வரக்குருக்கள்**
தோற்றம்: 27 02-1922 மறைவு: 27-12-96

அந்தணர் குலத்திலகர்கள் இருவரும் சுன்னாகத்தில் மயிலணியின் இரு கண்களாகத் திகழ்ந்து எத்தனை இடர்கள் வந்தும் எங்கள் குல தெய்வங்களாகிய விஸ்வநாதப் பெருமானுக்கும் முருகப்பெருமானுக்கும் சிவபூசைகள், அர்ச்சனைகள் செய்து எமது மக்களை சுகமாக வாழ வைக்க வேண்டும் என பிரார்த்திப்பவர்களை எமது கிராமம் இழந்து விட்டது. அவர்களது ஆன்ம சாந்திக்கு நாமனைவரும் பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மா இராமலிங்கம்
கிராமசேவையாளர்,
சுன்னாகம் வடக்கு, [illegible]

(52032)

## கண்ணீர் அஞ்சலி

புங்குடுதீவு கொத்தணி முன்னாள் அதிபராகவும்,
எமது கல்லூரியின் முன்னாள் அதிபராகவும்
விளங்கி அரும் பெருஞ் சேவையாற்றி சிவபதமடைந்த

**கந்தையா பேரம்பலம் அவர்களுக்கு**

எங்கள் கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரின் மனைவி, மக்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
யாழ்/புங்குடுதீவு மகாவித்தியாலயம்
(52057)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருள்களை இறக்க உதவும் படகுகளின் கட்டணம் அதிகரிப்பு

வடமராட்சி, டிச. 25

பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்குவதற்கு உதவும் படகுகளின் கட்டணம் பத்து சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடற் கொந்தளிப்புக் காரணமாக, பொருள்களுக்கான இழுவைப்படகுகளை கப்பலிலிருந்து கரைக்கு இழுத்து வரும் இழுவைப் படகுகளுக்கு வழமையான கட்டணத்துடன் வருடம் தோறும் நவம்பர் மாதம் தொடக்கம் பெப்ரவரி மாதம் வரை பத்து சதவீதம் கட்டண உயர்வு வழங்கப்பட்டு வந்தது.

இம் முறை அக் கொடுப்பனவு வழங்கப்படாததினால், படகுகளை சேவையிலீடுபடுத்து கடற்றொழிலாளர்கூட்டுறவுச் சங்கங்கள் யாழ். அரச அதிபரிடம் ஆட்சேபம் தெரிவித்திருந்தனர்.

கடற்றொழிலாளர் கூட்டுவுச் சங்கங்களின் ஆட்சேபத்தினால் கடந்த வருடங்களைப்போல இவ் வருடமும் நவம்பர் மாதம் தொடக்கம் பெப்ரவரி மாதம் வரையிலான படகுச் சேவைகளுக்கு முன்னரைப் போல பத்து சதவீத அதிகரித்த கொடுப்பனவு வழங்கப்படுகிறது,

(ஐ-173)

## யோகாசன வகுப்புகள்

நல்லை ஆதீனத்தில் வெள்ளி, சனி தவிர்ந்த ஏனைய நாள்களில் யோகாசன வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. காலை 6 மணி முதல் 7 மணி வரையும், மாலை 5 மணிமுதல் 6மணி வரையும் இருபாலாருக்கும் வகுப்புகள்நடைபெறுகின்றன

## கிபிர் தாக்குதல்

மாங்குளம் பகுதியில் குடியிருப்புக்கள் நோக்கி நேற்று முன்தினம் காலை 8 மணியளவில் கிபிர்விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன.

சேத விவரங்கள் தெரிய வரவில்லை. (இ-164)

# மண்எண்ணெய் அடுப்பு பாவனை அதிகரிப்பு

மண்எண்ணெய் அடுப்புகளின் பாவனை மீண்டும் அதிகரித்துள்ளது.

மரங்கள் தறிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டதன் காரணமாக விறகின் விலை வெகுவாக உயர்ந்துள்ளது. விறகிற்கு ஏற்படும் செலவிலும் பார்க்க மண்எண்ணெய்க்கு ஏற்படும் செலவு குறைவாக இருப்பதனால்மக்கள் இதனை நாடுகின்றனர்.

இப்போது மாதம்ஒன்றுக்கு 6 லீற்றர் ஒவ்வொரு குடும்பத்திற்கும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்படுவது குறிப்பிடத் தக்கது.

யாழ். வர்த்தக நிலையங்களில் மண்எண்ணெய் அடுப்புகள் அதிகளவில் விற்பனையாகின்றன.

(ஐ-154)

# வறிய குடும்பத்துக்கு உணவு வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிச. 25

மானிப்பாய் சங்குவேலிப் பகுதியில் வறிய நிலையில் உள்ள குடும்பம் ஒன்றுக்கு 513 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி ஒரு வருடகாலத்துக்கு உணவுப்பொருள்களை வழங்க உறுதி அளித்துள்ளார்.

5 பிள்ளைகளைக் கொண்ட இக் குடும்பத்தின் தலைவர் பலா மரத்தில் இருந்து தவறி விழுந்ததனால் தொழில் செய்ய முடியாத நிலையில் உள்ளார். இந் நிலையில் இவர்களுக்கு மேலும் மூன்று குழந்தைகள் பிறந்துள்ளன.

இவரது மனைவியான ரஜனிதேவி ஸ்கந்தராஜா தமது குடும்பத்தின் நிலையையும், பிள்ளைகளின் நிலையையும் குறிப்பிட்டு 513 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி டி யூ. முனசிங்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தார்.

அதனை அடுத்தே குழந்தைகளை வளர்ப்பதற்கு ஒரு வருடகாலத்துக்கு உணவுப் பொருள்களைப் பெற்றுத் தருவதாக அவர் உறுதி அளித்துள்ளார் என்று 513 ஆவது படையணியின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## மழலைகள் கலை விழா

கைதடி, டிச. 25

கைதடி மத்தி வளர்மதி அறவழி மழலைகள் கல்விப் பூங்காவும், கைதடி கலைநகர் அறவழி மழலைகள் கல்விப்பூங்காவும் இணைந்து வழங்கும் மழலைகள் வருடாந்தக் கலை விழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு மழலைகள் கல்விப்பூங்கா வளர்ச்சிக் குழுத் தலைவர் இ. செல்வரத்தினம் தலைமையில் கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயகலை அரங்கிலே நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக அறவழி நிறுவன கல்வி ஆலோசகர் கே. கோபாலகிருஷ்ணன் கலந்து கொள்வார். (ஐ-ரீ)

## வயோதிபர் சடலம் மீட்பு

வவுனியா, டிச. 25

நெடுங்கேணி-முல்லைத்தீவு வீதியில் 18 ஆம் கட்டைப் பகுதியில் உள்ள வீடொன்றிலிருந்து வயோதிபர் ஒருவரின் சடலம் எலும்புக்கூடாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கணபதிப்பிள்ளை பொன்னம்பலம் என்ற வயோதிபரின் சடலமே அது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இராணுவம் முன்னேறி வந்த போது இவரை வீட்டில் விட்டுவிட்டு உறவினர்கள் இடம் பெயர்ந்ததால் ஷெல் குண்டுச்சத்தங்களால் அதிர்ச்சியுற்று இவர் இறந்திருக்கலாம்என்று நம்பப்படுகிறது.

(ஐ-164)

# 24 கட்டில்களே உள்ளன 86 நோயாளர்கள் அனுமதி

## பளை ஆஸ்பத்திரியின் நிலை இது

தென்மராட்சி, டிச.25

பளை ஆஸ்பத்திரி வார்ட்டுகளில் நோயாளர்களுக்காக 24 கட்டில்களே உள்ளன. ஆனால் 86 நோயாளர்கள் வார்ட்டுகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதனால் நடைபாதைகள், விறாந்தைகள் எங்கும் நோயாளர்கள் நிறைந்துகாணப்படுகின்றனர்

தினமும் வெளிநோயாளர் பிரிவிலும் நோயாளர்கள் நிறைந்து காணப்படுகின்றனர்.

சிகிச்சை பெறவருவோரில் பெரும்பாலானோர் காய்ச்சலாலும், வயிற்றுளைவினாலும் பாதிக்கப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)



புரட்சித் தலைவர் மக்கள் திலகம்
அமரர் டாக்டர்

# எம். ஜி. ஆர்.
# 10 ஆம் ஆண்டு நினைவு நாள்

காலம்: 26 - 12 - 1997 வெள்ளிக்கிழமை
தாவடிப் பிள்ளையார் திறந்தவெளி அரங்கு
தலைமை: திரு. பொன். மதிமுகராசா
சமாதான நீதிவான் அவர்கள்
(தலைவர், அனைத்துலக எம். ஜி. ஆர். பேரவை)

## நிகழ்ச்சி நிரல்

26 - 12 - 1997 வெள்ளிக்கிழமை

மாலை 4 00 மணி மங்கள விளக்கேற்றல்
திரு. வே. பொ. பாலசிங்கம் (ஆணையாளர் யாழ். மாநகரசபை)
திரு. ஆ. ஜீவரத்தினம் (ஆறுமுகம் சிற்பாலயம், திருநெல்வேலி)
உரிமையாளர். குகன் ஸ்ரோர்ஸ் யாழ்.
திரு. எஸ் பி. முருகேசு நிறுவன முகாமையாளர்
திரு. க. சிவசுப்பிரமணியம் (பேக்கறி உரிமையாளர் சங்கம்)
திரு. செ. செல்வரஞ்சன் (தலைவர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்)

ஆசியுரை: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரியார் சுவாமிகள்
தமிழ்த்தாய் வாழ்த்து: திரு. எஸ். பத்மநாதன் அவர்கள்
முதன்மை விருந்தினர்: திரு. க. சண்முகநாதன் (அரச அதிபர்)
டாக்டர் செல்வி கனகரத்தினம் (மா. சு. பணிப்பாளர்)
டாக்டர் நச்சினார்க்கினியார்
டாக்டர் குகதாசன்
டாக்டர் சிவனேசன்

பிரதம விருந்தினர்: திரு. க. திருநாவுக்கரசு [நீதிபதி மல்லாகம்]
திரு. க. கேசவன் [பதில் நீதிபதி யாழ்.]
கலாநிதி வி. கே. கணேசலிங்கம் [இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்]
திரு. க. தேவராசா [விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்]

நன்றியுரை: திரு. செ. இலகுநாதன் [பேரவை உறுப்பினர்]

சிறப்பு விருந்தினர்: திரு. சி. வி. கே. சிவஞானம் [முன்னாள் ஆணையாளர்]
திரு. வே. நவரத்தினராசா [முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர்]
திரு. செ. அன்னலிங்கம் [முன்னாள் மாவட்ட பதிவாளர்]

மலர் மாலை சூட்டுதல்: திரு. கே. எஸ். பேரம்பலம் அன்சன்ஸ் உரிமையாளர்
திரு. லயன் ரி. சற்குணராசா [சீமாட்டி உரிமையாளர்]
திரு. லயன் ப. சிவபாஸ்கரன் [சாரங்கா உரிமையாளர்]
திரு. சி. நமசிவாயம் [செயலாளர் வர்த்தக சங்கம்]
திரு. அற்புத தேவராசா [புஸ்பா ரேடிங் உரிமையாளர்]

தமிழ் மரபிசை: என். கே. பத்மநாதன் | தெ. உதயசங்கரி
கே. ஆர். சுந்தரமூர்த்தி | கே. சிவகுமார்
ஆர். கேதீஸ்வரன் | வி. கே. கானமூர்த்தி

வரவேற்புரை: க. சுந்தரலிங்கம் (அதிபர்)
நினைவுப்பேருரை: கலாநிதி க. குணராசா (செங்கை ஆழியான்), [பதிவாளர் பல்கலைக்கழகம்]

சிறப்புரை: திரு. ஆறு. திருமுருகன்
திரு. ஆ. மகாலிங்கம் (வலிகெற்கு செயலர்)
திரு. சு. இரத்தினராசா (கல்விப் பணிப்பாளர்)
திரு. கோ. சி. வேலாயுதம் (முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர்)
திரு. ரீ. கே. கிருஸ்ணசாமி (உள்ளூராட்சி ஆணையாளர்)
திரு. சிவ. மகாலிங்கம் (விரிவுரையாளர், ஆசிரியர் கலாசாலை)
திரு. சாம். இராஜசூரியர் (போதகர்)

கவியரங்கு: "தமிழினத்தின் காவலன் எம். ஜி. ஆர்."
தலைவர்: மதுரகவி காரை. எம். பி. அருளானந்தன்

பட்டிமன்றம்:
### புரட்சித் தலைவரின் நிலைத்த புகழுக்குக் காரணம் சினிமாவா? அரசியலா?

நடுவர்: திரு அ குமாரவேலு
பொன். பூலோக சிங்கம் | எம். எஸ். தயாளன்
சிவசண்முகமூர்த்தி | எம். எஸ். முத்துலிங்கம்
ஆ. பிறிற்ரோ | பசுபதி
கணேசலிங்கம்

மெல்லிசை: ஈழ நல்லூர் அருணா இசைக் குழுவினர் அளிக்கும் எம். ஜி. ஆர். இசை அமுதம்
நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு: திரு. எம். சபாம்பிள்ளை
நிகழ்ச்சி அமைப்பாளர்: திரு. செ. பரமநாதன்

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். ★

[சி/2471]

விழா சிறப்புற வாழ்த்துவோர்:-

**நியு விதுஷா நகை மாடம்**
தங்க நகை வியாபாரம்
191, H. K. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**சாரங்கா நகை மாடம்**
தங்க வைர நகை வியாபாரம்
177\4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தலைமை ஸ்தாபனம்: தொலைபேசி எண்: 24339

**அருள் முருகன் நகை அகம்**
96 / 1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கிளை ஸ்தாபனம்: **சிவா நகை மாடம்**
யாழ். வீதி, சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டியழைப்பும்

ஆண்டவன் படைப்பு: 17-08-1970

பொறாமையின் அழிப்பு: 13-11-1997

## செல்லப்பா குலசேகரம் [மயிலிட்டி]
## (குமார்) (குலப்)

(ரெட்ணா பேக்கரி உரிமையாளர், தென்மராட்சிக் கிளை உபதலைவர், புதிய உயர் கல்லூரி மாணவன், பேராதனைப் பல்கலைக்கழக இறுதி ஆண்டு (B. A. Final) வெளிவாரி மாணவன்)

எமது மகனின் பிரிவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து பல்வேறு வழிகளில் உதவி செய்தோருக்கும், கடிதமூலமும், நேரிலும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் எமது நன்றியைத்தெரிவிப்பதுடன் 27 12 1997 சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற இருக்கும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறும்அன்புடன் அழைக்கின்றோம். நேரில் வந்து தனிப்பட்ட அழைப்புக்கள் தெரிவிக்க முடியாத எமது நிலையைப் புரிந்து அவரில் அன்புள்ளங் கொண்ட அனைவரையும் இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருவீர்கள் என எதிர்பார்க்கிறோம்.

பெற்றோர், சகோதர சகோதரிகள்.

நுணாவில் மேற்கு, (52074)


## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிச.25

கோப்பாய், உடுவில், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானை கல்விக்கோட்டங்களுக்கு உட்பட்ட பாடசாலைகளில் ஆண்டு 11 இல் சைவ சமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4 30 மணிவரை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை மேற்படி கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு வலயம் - 2 கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஐ-4)

## சாயி சமித்தியில் நத்தார் விழா

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்தியசாயிசேவா சமித்தி மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணி முதல் 5 மணி வரை நத்தார் விழா நடைபெறவுள்ளது.

யேசுபிரான் பூமியில் அவதரித்த நாளை ஒட்டி புட்டபர்த்தியில் நடைபெறும் வைபவங்களை ஒட்டியதாக இங்கும் நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. கிறிஸ்தவ ஆலய பாடகர்களின் ஆராதனை கீதங்கள் மற்றும் கிறிஸ்தவ அருட்தந்தை வழங்கும் சிறப்பு அருளுரை, பஜனை என்பன இடம்பெறும். நத்தார் பாப்பா பிரசாதம் வழங்குவார். (ஐ)


# யுனைற்றெட்

பஞ்சாங்க கலண்டர்

மொத்தமாகப் பெற்றுக்கொள்ள

ஸ்ரீ முருகன்

இல. 303,
கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(52028)



# முதலாவது
# பிறந்தநாள் வாழ்த்து



★ செல்வி செல்வராஜா கஸ்தூரி ★

மானிப்பாயில் வதியும்
செல்வராஜா ரோதி தம்பதிகளின்

செல்வப் புதல்வி கஸ்தூரி தனது முதலாவது பிறந்த நாளை 25-12-97 வியாழக்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, பப்பா, யாழ்ப்பாணத்தில் இருக்கும் பெரியப்பா குடும்பம், அராலியில் இருக்கும் சித்தப்பா, மாமாமார், மாமிமார் மச்சான்மார், மச்சாள்மார். சங்கானையில் வசிக்கும் மாமா, மாமி குடும்பத்தினர், மானிப்பாயில் வசிக்கும் பெரியப்பா குடும்பத்தினர், குட்டி மாமா, ஆஸ்திரேலியாவில் இருக்கும் ஆசைமாமா, உடுவிலில் வசிக்கும் பெரியமாமா குடும்பத்தினர், அக்காமார், அண்ணாமார், ஆசைமச்சான்' உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் அருள் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்க வென வாழ்த்துகின்றனர்.

உடுவில் றோட்,
2 ஆம் ஒழுங்கை,
மானிப்பாய். (52087)



நத்தார், புதுவருட தினத்தை முன்னிட்டு
தமிழ்கள்
வாழ்த்துக்களை வழங்கும்

# ராகம்ஸ் பட்டுச் சோலையினர்

சகல விதமான புடவைத் தெரிவுகளுக்கும்
நீங்கள் நாட வேண்டியது:

# ராகம்ஸ் பட்டுச் சோலை

24, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

(சி/2462)



# அம்புவியை அலங்கரிக்கும் அருட்சுடரே போற்றி!

அம்புவியை அலங்கரிக்கும் அருட்சுடரே போற்றி.
எம்பணியை ஏற்றருளும் உம்மருளை ஊற்றி
பூமியில் பொங்கும் புண்ணியப் பூவே!
ஆவியைப் பொழிந்து அவலங்கள் தீரும்
மக்களது மனப்புயலை மாற்றியருள் வீசும்
உக்கிநிதம் உடையாமல் உள்ளத்திலே பேசும்
விடுதலைப் பயண இடர்களைத் தாங்க
அடியோர்க் கருளும் ஆன்மீக சக்தி
ஆன்மாவில் அருள்கரக்க அறவழிகள் பரிமளிக்க
ஊனுடலில் உளமாற்றம் உவந்தளிப்பீர் பாலகனே!
ஏழைகளின் தந்தையே! பாவிகளின் நண்பனே!
வாழ்வளிக்கும் ஊற்றே! வழங்குமையா மன்னிப்பு.
சாத்தானின் சூழ்ச்சியில் சமுதாயம் மூழ்காது
காத்தருள வாரும் கடவுளின்! மகனே!
பிரிந்துசென்ற மக்களை அரவணைத்து ஆளும்
உறவுகொண்டு உம்மரசில் ஒன்றுசேர வையும்
மகிழ்ந்து பாடவும் மகிமைகள் கூடவும்
புகழ்ந்து போற்றவும் புனிதாண்டு தந்தருளும்
வையகமே பலிப்பீடம் வாழ்வெல்லாம் காணிக்கை
ஐயனே! நீரெமக்கு; அசையாத நம்பிக்கை.

ஞா. அரியாலர்
மிருசுவில்

(51793)



மாணவர் உலகத்திற்கு நன்கு அறிமுகமான
ஆசிரியர் குழுவுடன்

# A/L 2000

கலை, வர்த்தகப் பிரிவுகள்

ஆரம்பம்:- ஜனவரி 10, 10மணி (ப.நே.)

# D. M. I

233, STANLEY ROAD,
JAFFNA.

- D. SAM

★ அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

(இ-2469)



வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
எமது கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள்

அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்,
54, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

அஜந்தா ரேட்ஸ்
66, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(52049)



# O/L

Yr. 10, 9 & 8

புலமைப் பரிசில்

Yr. 5

ஆரம்பமாகியுள்ளது.

SHAMROCK

யா/ ஈச்சமோட்டை வீதி.

(52066)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சமிக்ஞை இல்லை

இன்று நத்தார். மனுக்குலத்தை இரட்சிப்பதற்காகவும் அது மாண்புறுவதற்காகவும் இயேசு பிரான் அவதரித்த இன்றைய நாள் உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படுகிறது.

அடக்கப்பட்டவர்கள், அநாதைகள், ஆதரவற்றவர்களின் இன்னல்களை அகற்றுவதற்காக தன்னை அர்ப்பணித்த தியாகியுமானவர் அவர்.

அயலானை நேசிக்குமாறும் ஏழைகள், ஆதரவற்றவர்கள் மீது அன்பு செலுத்தி அவர்களின் இன்னல்களை, கஷ்டங்களை நீக்குமாறும் மனுபரன் வெறுமனே போதிக்கவில்லை; தாமே கடைப்பிடித்துக் காட்டினார்.

மக்கள் வாழ்வில் - சமூக வாழ்வில் — அமைதியும் சமாதானமும் நிலவுவதற்கு சகலரும் உழைக்க வேண்டும் என்பது அவரது இலக்காக இருந்தது. புறச் சமாதானம் மட்டுமன்றி அகச் சமாதானமும் அவசியம் என்பதனை அவரது வாழ்க்கை எடுத்துக்காட்டியது.

இயேசு அவதரித்த காலத்தில தேவைப்பட்ட பலவும் இன்றைய சூழ் நிலையில் ஈழத்தமிழர் வாழ்வின் தேவைகளாகியும் உள்ளன.

போர் ஒன்று தமிழ் மண்ணில் தொடர்ந்து கொண்டிருக்கிறது. அதனால் தமிழ் மக்கள் மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

போர் நடைபெறாத யாழ்ப்பாணக் குடாநாடு போன்ற பகுதிகளிலும் போர் உண்டாக்கிய புண் இன்னும் மாறவில்லை. பலர் ஆதரவற்றவர்களாகவும் அங்கவீனர்களாகவும் மாறியுள்ளனர்.

இவர்களுக்குப் பிறரின் உதவி மட்டுமல்ல அன்பும் தேவைப்படுகிறது; ஆதரவும் வேண்டப்படுகிறது. இயேசு பிறந்த இந்த நாளில் அவர்கள் மீது அன்பு செலுத்தவும் ஆதரவு வழங்கவும் சங்கற்பம் கொள்வோமாக.

வாழ்க்கையில் நிம்மதியும், இயல்பு நிலையும், மீண்டு வருவதற்கு அமைதியும் சமாதானமும் இன்றியமையாதன. அவற்றை எய்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று நத்தார், புதுவருட காலங்களில் பேசப்படுவதுண்டு.

ஆனால் போர் தொடங்கி ஏழு வருடங்கள் கழிந்தும் அமைதியைக் காணோம்; சமாதானமும் தொலைக்கப்பட்டு விட்டது; என்ற நிலையே தொடர்கிறது.

இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வு ஒன்று காணப்படும் வரை அமைதி, சமாதானம் என்பன கிட்டவும் நெருங்கி வர மாட்டா. அவை தமிழர்களை ஏறெடுத்துப் பார்க்க வேண்டுமெனில் போர் நிறுத்தப்படுவது இன்றியமையாததாகும்.

ஆனால் போர் நிறுத்தம் ஒன்று வருவதற்கான துளி அளவு சமிக்ஞையையும் வெளியே மட்டுமன்றி உள்ளேயும் காணமுடியவில்லை. சமாதானத்துக்கான போர் கால அட்டவணை இன்றி நீண்டு செல்கிறது.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜனாதிபதியிடம் பட்டயம் வழங்கியது போல, குடாநாட்டுக்கான பிரதான பாதையை கைப்பற்றியதாகவும் பட்டயம் கொடுக்கும் ஆசை உண்டாம்.

இத்தகைய சூழ்நிலையில், போர் நிறுத்தத்துக்கான முயற்சி நடைபெறும் என்றோ நீதியுடன் கூடிய சமாதானம் அமைதி வரும் என்றோ இந்த நத்தார் காலத்திலும் நம்ப முடியவில்லை.

அதற்காகப் பிரார்த்திப்பதனைத் தவிர சாமான்யன் என்ன செய்ய முடியும்!

## அனுமதி அட்டையை சாப்பிட்ட மாடு!

### பரீட்சையைக் கோட்டை விட்ட மாணவி

தென்மராட்சி, டிச. 25

மாணவி ஒருவரின் பரீட்சை அனுமதி அட்டையையும், தபால் திணைக்கள அடையாள அட்டையையும் மாடு சாப்பிட்டு விட்டதால் அந்த மாணவி பரீட்சையைக் கோட்டைவிட்ட சம்பவம் பளை இத்தாவில் பகுதியில் இடம் பெற்றது.

அண்மையில் நடைபெற்ற ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சை ஆரம்பதினத்தன்று சம்பந்தப்பட்ட மாணவி தமது பரீட்சை அனுமதி அட்டையையும் அடையாள அட்டையையும் முற்றத்தில் இருந்த கட்டிலில் வைத்துவிட்டு கிணற்றடிக்குச் சென்று திரும்பியபோது அங்கு நின்ற மாடு அவைகளைச் சாப்பிட்டுக் கொண்டிருந்ததாம்.

அனுமதி அட்டையும், அடையாள அட்டையும் இலலாததால் மாணவி பரீட்சை எழுத பரீட்சை நிலையத்துக்குச் செல்லவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-117)

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

ஆசிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட நிதிமுகாமை தொடர்பான பயிற்சி வகுப்புக்களில் பங்குபற்றியவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று காலை 9.00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

செயலக சிரேஷ்ட கணக்காளர் கா. வீரசிங்கம் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் பிரதம விருந்தினராக அரச அதிபர் க. சண்முகநாதன் பங்குபற்றுவார். (உ-3)

## அன்பு...

(நான்காம் பக்கத் தொடர்)

முடிக்கொள்ளும் கிறிஸ்தவனுக்கு அந்த அழுகைக் குரல் அமைதியைக் குலைப்பதாக மாறுகின்றது. மரத்துப் போன மனச்சாட்சி சமாதானம் அற்றுப் போகின்றது. ஆம், அதுவே அருளின் தொடக்கம். கிறிஸ்து பிறந்து விட்டார்; நீதியின் ஆதவன் தோன்றிவிட்டார் என்பதற்கு முதல் அறிவிப்பு. இனி அவன் தன் சமாதானத்தை இழந்து கிறிஸ்து அளிக்கும் சமாதானத்தைத் தேடியாக வேண்டும். நத்தார் - சமாதானம் நாம் கொடுக்கும் பொருள் அல்ல; மாறாக அதுகொடுக்கும் சமாதானம் ''போதிய உடையோ அன்றி உணவோ இல்லாத சகோதர சகோதரி யாரேனும்இருந்தால் தேவையானது யாதொன்றையும் கொடாமல்'' சமாதானமாய்ப் போய் வாருங்கள், குளிர் காய்ந்து கொள்ளுங்கள் பசியாறிக் கொள்ளுங்கள் என்பானாகில் பயன் என்ன? (யாக. 2: 16)

நீதியே சமாதானத்திற்கு அடிப்படை. நீதியைக் கை நெகிழவிட்டு விட்டு நத்தார் இரவில் சமாதானத்தைக் கைப்பற்ற முடியாது. அநீதியை மூடி மறைத்து விட்டு நத்தார்இரவில் கோடி உடை அணிந்து பக்தியோடு பாலனை முத்தி செய்தால் நாம் உள்ளம் புரையோடிப் போன பரிசேயர்கள்.

இயேசு எந்த ஒரு தனி மனிதனுக்கும் சொந்தமானவர் அல்லர். மாறாக அத்தனை நல்ல மனிதர்களுக்கும் சொந்தமானவர். அவர் கொணர்ந்த புதுவாழ்வும் அருளும் உண்மையும் நல்ல உள்ளங்களுக்குச் சொந்தமானவை எங்கு.இந்த நலன்கள் நிலைநாட்டப் படுகின்றனவோ அங்கு தான் இயேசு பிறக்கின்றார்என்றுபொருள். எங்கு அன்பின் உரையாடல் நடக்கின்றதோ அங்கு தான் அவர் குடிகொண்டிருக்கின்றார். திறந்த உள்ளங்களில் தான் இயேசு தம் கூடாரத்தை அமைக்கின்றார். எங்கெல்லாம் சுதந்திரம், நீதி, சேவை, அன்பு நிலைபெறுகின்றதோ மனிதர்கள் பகிர்ந்து வாழ கற்றுக்கொள்கின்றார்களோ அங்கெல்லாம் இயேசு பிறக்கின்றார்.

## சமய சந்நிதியில்

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய சுற்றாடலில் உள்ள சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வுகளில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முருகனடியார்கள் வழங்கும் ''முருகநாம பஜனை''இடம் பெறும். இந்நிகழ்வுக்கான அறிமுகவுரையை ஞானபண்டிதர்இயலரசு க.முத்துவேலு நிகழ்த்துவார். (ஐ-173)

★ ★ ★

கோண்டாவில் குமர கோட்டம் சித்திவைரவர் அம்பாள் ஆலயத்தில் இன்று காலை 8 மணி முதல் திருவாசக முற்றோதல் நடைபெறவுள்ளது. (ஐ)

★ ★ ★

கச்சாய் வீதி நாவலடிப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் நாளை விசேட பூசையுடன் பிள்ளையார் கதை நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன. காலை 11.00 மணிக்கு பிள்ளையார் கதை படிப்பினைத் தொடர்ந்து ''விஞ்ஞானமும் ஆலயங்களும்'' என்னும் பொருளில்-இளைப்பாறிய உப அதிபர் சிறீராமச்சந்திர சர்மா உரை நிகழ்த்துவார். (உ-31)

★ ★ ★

நாட்டின் சமாதானமும் சுபீட்சமும் வேண்டி அராலி வண்ணப்புரம் விசாலாட்சி சமேத விஸ்வநாதர் தேவஸ்தானத்தில் இன்றுகாலை7.00 மணிமுதல் பிற்பகல் 5 00 மணிவரை திருவாசகமுற்றோதல் இடம்பெறவுள்ளது.

★ ★ ★

குருநகர், டிச. 25

யாழ். மரியன்னை பேராலயத்தில் கிறிஸ்து பிறப்புத் தினமான இன்று காலை 6.15 மணிக்கு யாழ். ஆயர் பேரருள் திரு. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் கூட்டுத் திருப்பலி இடம்பெறும். (உ-51)

★ ★ ★

கிறிஸ்மஸ் தினமான இன்று வியாழக்கிழமை காலை 4.30 மணிக்கும் 6.30 மணிக்கும் கிறிஸ்மஸ் தின பூசைப்பலிகள் குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் இடம்பெற உள்ளன.

குருநகர் புதுமை மாதா தேவாலயத்தில் இன்று காலை 7.30 மணிக்கு திருப்பலி இடம் பெற உள்ளது.

## உதைபந்தாட்டம்

வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் வைர விழாவை முன்னிட்டு கழக மைதானத்தில் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நாளை 4 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் சுடர் ஒளி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மனோகரா விளையாட்டு கழகம் மோதவுள்ளது. [illegible]

## யாழ்., வவுனியா நிலையங்களில் வெளிவாரிப் பரீட்சை நடக்கும்

யாழ்ப்பாணம், டிச. 25

யாழ், பல்கலைக்கழக 96 - 97 கல்வியாண்டு வெளிவாரி மாணவர்களின்முதலாம் ஆண்டு கலை, வணிக பாடநெறிகளுக்கான பரீட்சைகள் எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகி ஜனவரி 12 ஆம் திகதி வரை நடைபெற உள்ளன.

இப் பரீட்சையை யாழ். பல்கலைக்கழகத்திலும், யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்திலும் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இப் பரீட்சைக்கு விண்ணப்பித்து தற்போது வன்னிப் பகுதியில் தங்கியுள்ள மாணவர்கள் வவுனியாவளாகத்தில் நடைபெறும் பரீட்சைக்குத் தோற்றக்கூடியவாறும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

அதேசமயம் யாழ். பல்கலைக்கழக 95 - 96 கல்வியாண்டு வெளிவாரி மாணவர்களின் முதலாம் ஆண்டு பரீட்சை முடிவுகள் வெளியாகி உள்ளன.

கலை பரீட்சையில் தோற்றிய மாணவர்களில் 88 பேர் சித்தியடைந்துள்ளனர்.

வணிகப் பாடநெறியில் தோற்றிய மாணவர்களில் 13 பேர் சித்தியெய்தியுள்ளனர். (ஐ-9)

## தொலைபேசிக் கட்டணம் அதிகரிக்கும்

கொழும்பு, டிச. 25

ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் உள்நாட்டு தொலைபேசிக் கட்டணம் 25 சதவீதம் அதிகரிக்கப் படும்.

இத் தகவலை ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத் தலைவர் கேமசிறிபெர்னாண்டோ தெரிவித்தார்.

''உள்நாட்டு தொலைபேசி சேவையினால் ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனம் நஷ்டம் அடைந்துவருகின்றது.

''சர்வதேச தொலை பேசி சேவைகள் மூலம் இந்த நஷ்டம் ஈடு செய்யப்[illegible] கின்றது. [illegible] தேச தொலை[illegible] ணத்தை அதிகரிக்க முடியாது'' இப்படி அவர் மேலும் கூறினார். (இ-21)

## பதிவு வேலை நடைபெறாது

யாழ்ப்பாணம், டிச. 25

யாழ். மாவட்ட பதிவகத்தில் நாளை முதல் 31 ஆம் திகதி வரை விவாக, பிறப்பு, இறப்பு சான்றிதழ்களுக்கு விண்ணப்பங்கள் ஏற்கும் வேலைகள் நடைபெற மாட்டாது என்று யாழ். மேலதிக மாவட்டப் பதிவாளர் ந. சதாசிவஐயர் அறிவித்துள்ளார்.

வருட இறுதியில் இவ்வாண்டுக்கான வேலைகளை முடிவு செய்து ஆவணங்களை ஒழுங்கு படுத்தும் வேலையே இத் தினங்களில் நடைபெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ-3-30)

## நஷ்டஈடு பெறாதோருக்கு!

யாழ்ப்பாணம், டிச. 25

வன்செயல் சம்பவங்களில் உயிரிழந்த மற்றும் காயம் அடைந்தவர்கள் தொடர்பாக நஷ்டஈட்டைப் பெறுவதற்கு 1995 டிசம்பர் மாதத்துக்கு முன்னர் விண்ணப்பித்து இதுவரை கொடுப்பனவு பெறாதவர்கள் உடன் செயலக புனர் வாழ்வுப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார். (உ-3)

## நாளை

**மார்கழி 11**

வெள்ளிக்கிழமை
திதி: துவாதசி
முன்இரவு 11.12 வரை.
நட்சத்திரம்: விசாகம்
முன்இரவு7.57 வரை.
சுபநேரம்: 6 27-7.57
ராகுகாலம்: 10 57-12 27
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## வர்த்தக நிலையங்களுக்கு சிரமதானம்

வடமராட்சி, டிச. 25

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் படையினரும், வைத்தியசாலை ஊழியர்களும்இணைந்துசிரமதானப்பணியினை கடந்த ஞாயிறன்று மேற்கொண்டனர்.

இச் சிரமதானப்பணியின் போது வைத்தியசாலை வளவில் உள்ள பற்றைகள், முட்புதர்கள் யாவும் வெட்டப்பட்டு துப்புரவு செய்யப்பட்டன. (ஐ-173)

## சாயி சிந்தனை

குழந்தைகள் புத்தம் புதிய துகிலைப் போன்றவர்கள். புதுத்துணிக்கு எந்த வர்ணத்திலும் சாயமூட்டலாம்; நிறக் கலவையில் அமுக்கிவிட்டு எடுத்தால் போதும். வளர்ந்தவர்கள் பழைய துணியைப் போன்றவர்கள். பழைய துணியில் சாயம் எளிதில் ஏறாது; அது பார்ப்பதற்கு நன்றாகவும் இருக்காது. பசுமையான, மென்மையான இதயமுடையவர்கள் பழக்கங்களையும், நெறிமுறைகளையும் விரைவில் கற்றுக் கொண்டு விடுவார்கள். நற்பழக்கங்களையும் நெறிகளையும் கற்பதற்கு வயது ஒரு தடையல்ல. பயிற்சியின் மூலம் பிள்ளைகளும் அவற்றைக் கற்றுக் கொள்வர்.

வளர்ந்தவர்கள் போலியான வெட்கத்தையும் பெருமையையும் வளர்த்து ஆழமற்றிருப்பார்கள். தங்கள் செயல்களை நியாயப் படுத்துவதற்குச் சமாதானங்களைக் கண்டுபிடிப்பர். தவறுகளுக்கு நியாயங்களைக் கற்பிப்பார்கள். இவ் வகையான குறைபாடுகள் குழந்தைகளிடம் இல்லை. அவர்கள் யாரையும் நம்பி விடுவர். எவரும் அவர்களை நம்பலாம். அவர்களுடைய இதயம்''கிராமபோன்'' தட்டுப் போன்றது. நீங்கள் பாடும் மெட்டு எதுவானாலும் அது அவர்களிடம் பதிந்துவிடும். ஊசி கூரியதாய் இருக்க வேண்டும். அதே மெட்டை எந்த வித பிசகுமில்லாமல் திருப்பி உங்களுக்குப் பாடுவார்கள்.

அந்த ஊசிதான் பிரேமை என்கின்ற பேரன்பு. அது நேரியதாக, ஒருமுகப்பட்டதாக இருந்தால் இசை பிறக்கும். வளர்ந்தோரைப் பொறுத்த மட்டில் ஊசியின் கூர் மழுங்கி விட்டிருக்கின்றது. ஏகாக்ர பாவம் என்ற பேறு குழந்தைகளிடம் உண்டு. அவர்களுக்கு அச்சமில்லை. மூத்தோரே பயத்தை அவர்களுக்கு ஊட்டுகிறார்கள். அவர்கள் பேசுவது உண்மை. பொய் பேசும் வித்தையை அவர்களுக்கு மூத்தோர் கற்றுக் கொடுக்கின்றனர். கவனமாகப் பார்த்துச் சொல்லும்படி குழந்தைகளை வளர்ந்தவர்கள் பழக்குகின்றார்கள். அதனால் பிறரின் தப்புக்களையும், குற்றங்களையும் அறிவதற்கு அவர்கள் ஆர்வங் கொள்கின்றனர்.

[ஆதாரம்:- Sathya Sai Speaks: Vol. II]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத்தியஸ்தராகச்..

(முதலாம் பக்கத் தொடர்)

சேர்ந்த தத்துவவியலாளரும், யாழ். முன்னாள் குரு முதல்வருமாகிய வண. பிதா எஸ். ஜே இமானுவேலை பேராயர் டூட்டு அண்மையில் தென்னாபிரிக்கத் தலைநகர் கேப் டவுனில் சந்தித்தார். அந்தச் சந்திப்பின் பின்னர் பேராயர் டூட்டுகூறியதாவது:

கொழும்பில் ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் ஆட்சிப்பீடத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பெரும்பான்மையினரான சிங்களவர்கள், பெரும்பான்மை மக்கள் அனுபவிக்கும் அரசியல், சமூக உரிமைகளை தமிழ் இனத்தவர்களுக்குவழங்கமறுத்துவருவதாக எனக்குப் படுகின்றது.

தமிழினத்தவர்களுக்காக நான் ஆழ்ந்த கவலையடைகிறேன்.

இந்த நீண்ட வன்செயல்கள் மற்றும் யுத்தத்தால் ஏற்பட்டுள்ள உயிர், உடைமை இழப்புக்களை நான் நன்கு அறிவேன்.

கடந்த நாற்பது வருடங்களாக தமிழர்கள் இனப்பாகுபாட்டுக்கு உட்படுத்தப்பட்டு வருவதையும்நான்அறிவேன்.

பூசலில் ஈடுபட்டுள்ள குழுக்களிடையே பேச்சு நடத்தி சமாதானத் தீர்வைக் காணும் முன்முயற்சிகளை தென்னாபிரிக்கா மேற்கொள்ளலாம் என நான் நம்புகிறேன்.

ஸ்ரீலங்காவில் சமாதானத்தையும் அமைதியையும் ஏற்படுத்தும் முயற்சியில் எனது ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெறும் நோக்கத்துடன் வண. பிதா இம்மானுவேல் அண்மையில் என்னைச் சந்தித்தார். அவரைச் சந்திக்கக் கிடைத்ததை பெருமையாகக் கருதுகின்றேன் — என்று தெரிவித்தார். (உ)

## வேட்பு...

(முதலாம் பக்கத் தொடர்)

நியமனப் பத்திரங்களை நிராகரித்ததை ஆட்சேபித்து வழக்குத் தாக்கல் செய்வதா என்பது குறித்து ஆராய்ந்து முடிவு எடுப்பதற்காகக் கூட்டணியின் உயர்மட்டக் குழு ஒன்று இன்று கொழும்பில் கூடவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## இரு குழந்தை பலி!

வன்னி ஜெயபுரம் கோபி குடியிருப்பில் போசாக்குணவு, மருத்துவ வசதி ஆகியவை இன்றி 10 மாதக் குழந்தைகள் இரண்டு உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ராஜா வெல்டன் டெனிஸ்ரலா, சிவராசா தமிழினி ஆகிய குழந்தைகளே உயிரிழந்தனர்.

## வன்னிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

உடனடியாக அனுப்பிவைக்கவும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (உ-3)

## மட்டு...

(முதலாம் பக்கத் தொடர்)

முஸ்லிம்களுக்குச் சொந்தமானது என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## 103 ஈழத் .

(முதலாம் பக்கத் தொடர்)

அதிகாரிகள் அண்மையில் கைது செய்திருந்தனர். அவர்களில் 103 பேரே இன்று நாடு கடத்தப்படவிருக்கின்றார்கள். எஞ்சிய 97பேர் பின்னர் நாடுகடத்தப்படுவர் என லித்துவேனிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

லித்துவேனியாவுக்குள் நுழைவதன் மூலம், அங்கிருந்து ஸ்கண்டிநேவிய நாடுகளுக்குள் ஊடுருவலாம் என ஆசிய நாட்டவர்கள் பலர் கருதுவதாகவும் —

இத்தகைய திட்டத்துடன் முகவர் ஒருவரால் அழைத்து வரப்பட்ட ஒரு தொகுதி இலங்கையரே லித்துவேனியாவில் கைதுசெய்யப்பட்டு நாடு கடத்தப்படுவதாகவும் —

செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன. (உ)




ஆதரவாளர்கள் அனைவருக்கும்

குலம் கிறீம் ஹவுஸ் ஸ்தாபனத்தாரின்

நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்!

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பெற்ற
ஸ்பெஷல் ஐஸ்கிறீம், சொக்லெட் ஐஸ்கிறீம்
ஜெலி ஐஸ்கிறீர், வெனிலா ஐஸ்கிறீம், மட்டன்றோல்,
மிக்சர், லட்டு, பட்டர் கேக் வகைகள்,
மஸ்கட், அங்கர் பட்டர், ஸ்பெஷல் பீடா
இவை அனைத்தையும் ஒரே இடத்தில் சுவைத்து மகிழ



குலம் கிறீம் ஹவுஸ்

226, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/2436)



எரிக்கணேஷின் வாடிக்கையாளர் பெருமக்கள்,
நண்பர்கள் அனைவருக்கும் எமது இனிய நத்தார்
புதுவருட வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

விழி உங்களிடம்
அதன்
ஒளி எங்களிடம்



யாழ் குடாநாட்டில் மூக்குக் கண்ணாடிகள் வழங்குவதில் நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம் இவையனைத்தும் ஒருங்கமைந்தவர்கள்.

இறக்குமதி செய்யப்பட்ட அழகிய பிறேம்களும், போட்டோகிறே, போட்டோ பிறவுண் கண்ணாடிகளும், நீங்கள் தெரிவு செய்து அதே நாளில் பெற்றுக்கொள்ள உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

எரிக்கணேஷ்

மூக்குக் கண்ணாடி விற்பனையாளர்
566, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.



Centre For English Language And Computer Education [CELCE]

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

பின்வரும் வகுப்புக்கள் நடைபெறவுள்ளன.

1. N. C. E.
2. Basic English
3. TOEFL
4. G.C.E. O/L 1998 - English Literature
5. C. I. M. A.

ஆசிரியர்: T. தெய்வதவபாலன்

ஆரம்பம்:- 03-01-1998

பதிவுகள்:- 30 – 12 – 1997 க்கு முன்னர்

– நிர்வாக இயக்குநர்

(52046)


## மரண அறிவித்தல்

### திருமதி நாகரத்தினம் செல்வநாயகம்

இணுவில் மேற்கு வட்டுவினியைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகரத்தினம் செல்வநாயகம் அவர்கள் 24-12-97 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் செல்வநாயகத்தின் அன்பு மனைவியும், திருமதி சாந்தினி கனகநாயகம்(ஆசிரியை, யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்), சாந்தலிங்கம் (ஹொலன்ட்), சாரதா (கொழும்பு), சாந்தகுமார் (ஹொலன்ட்), சாந்தரூபி (நோர்வே), சாந்தரூபன் (ஹொலன்ட்) ஆகியோரின் அன்புத்தாயாரும், திரு. இ. வை. கனகநாயகம் (ஆசிரியர், உடுவில் அ. மி. த. க. பாடசாலை), காலஞ்சென்ற அருணகிரிநாதன், லதா (ஹொலன்ட்) மற்றும் வாசுகி (கொழும்பு), முரளீதரன் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியாரும், பவதாரிணி, நந்தினி, வரோதயன், யசோதரன், மேனகா, கஸ்தூரி, றமிசன், நிஷாந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 24-12-97 நேற்று புதன்கிழமை நடைபெற்று பூதவுடல் பிற்பகல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

கே. கே. எஸ். வீதி,
கோண்டாவில் மேற்கு.

இ. வை. கனகநாயகம்
ஆசிரியர்(மருமகன்)

[52086]


அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்

கணேசா நகையக ஸ்தாபனத்தாரின்

நத்தார் நல்வாழ்த்துக்கள் அன்புடன் உரித்தாகுக!

உங்கள் நகைத்தேவைகளைப் பூர்த்திசெய்ய நீங்கள்
யாழ்நகரில் நாடவேண்டிய ஸ்தாபனம்

கணேசா நகையகம்

194, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வவுனியாவில்:
கணேசா நகையகம்
123, பஜார் வீதி,
வவுனியா.

தலைநகரில்:
யாழ். கணேசா நகையகம்
இல. 134, முதலாம் மாடி,
ROOM NO. 4, செட்டியார் தெரு,
கொழும்பு-11. T.P. No. 336252

(52064)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25-12-97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org